# ஜீலை 9 - புனித வெரோணிக்காக ஜீலியானி

இவள் சிறுமியாக இருக்கும் பொழுது பெற்றோருக்கு எவ்வித தொந்தரவும் கொடுத்ததில்லை. இவள் ஐந்து மாத குழந்தை. 12.06.1661ல் தமதிரித்துவத்தின் திருநாள் அன்று முதல் முறையாக நடக்கத் தொடங்கினாள். அவள் தன் தாயின் மடியில் அமர்ந்திருக்கும் வேளை எதிரில் ஒரு படம் தொங்கியது. அது புனித தமதிரித்துவத்தின் படம். இதை சிறுமி உற்று நோக்கினாள். பின் மடியிலிருந்து இறங்கி படத்தின் பக்கம் நடந்து நெடுநேரம் அன்புடன் அதை நோக்கிக் கொண்டிருந்தாள். அன்றிலிருந்து யாருடைய உதவியுமின்றி நடப்பாள். திருப்படங்களைக் கண்டால் அதை முத்தமிடும் வரை அவள் அமைதியாய் இருக்க மாட்டாள். இவளுக்கு ஒன்றரை வயதான வேலையில் வேலைக்காரி ஒரு நாள் அவளைக் கடைக்கு அழைத்துப் போனாள். அங்கே எண்ணெய் வாங்கினால். வியாபாரி கள்ளப்படிகளை உபயோகித்து வந்தான். இதுவரை ஒரு வார்த்தையும் பேசியறியாத வேரோணிக்கா “கள்ளப்படியை பயன்படுத்தக் கூடாது ஏனெனில் கடவுள் உன்னைப் பார்க்கிறார்” என்றாள். அன்றிலிருந்து அவள் சாதாரணமாக பேசினாள்.

இவளது மூன்றாவது வயதில் பீடம் ஒன்று அமைத்து அதில் மாதாவின் சுரூபத்தை வைத்தாள். மாதாவின் கையில் தேவ குழந்தை இருந்தது. அங்கு இவள் நெடுநேரம் செபிப்பாள். புது நன்மை வாங்க ஆசிப்பாள். இவளுடைய மூத்த சகோதரிகள் கோவிலிலிருந்து திரும்பியதும் அவர்களைப் பார்த்து, “இந்த அன்புத் தீ எவ்வளவு நேரம் நீடிக்கிறது?” என்று கேட்டாள். அதன் பொருள் தெரியாமல் அவர்கள் திகைத்தார்கள்.




ஆண்டவருடைய பாடுகளின் மீது இவளுக்கு அதிக பக்தி உண்டு. தன் ஆன்ம குருவின் ஆலோசனையின்படி பல தவ முயற்சிகளை அனுசரித்து வந்தாள். கடவுள் அனுப்பிய வேதனையை பொறுமையுடன் சகித்தாள். பின்னர் துறவியாகி புனிதையாக இறந்தாள்.

**சிந்தனை:** நமது சிந்தனை, சொல், செயல் அனைத்தையும் கடவுள் பார்க்கிறார் என்னும் உண்மையை ஒரு போதும் மறக்கக் கூடாது.

**செபம்:** ஆண்டவரே, உமது பிரசன்னத்தை நாங்கள் ஒரு போதும் மறவாதிருக்கும் வரம் தாரும்.